## டெல்லி அணியை வீழ்த்தியே தீர வேண்டுமென்ற உணர்வு மக்களிடையே மலைபோல் எழுந்துள்ளது!

# பாசிச பா.ஜ.க.வையும் - அடிமை அ.தி.மு.க.வையும் அடியோடு வீழ்த்தி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றிவாகை சூடும்!

## சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி தந்தை பெரியார் சிலை அருகே துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரத்தை நிறைவுசெய்தார்!



*சென்னை,ஏப்.23 -*

***2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்காக காஞ்சிபுரம், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் தொடங்கி, மாநிலம் முழுவதும் மேற்கொண்டிருந்த பிரச்சாரப் பெரும்பயணத்தை, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், தான் போட்டியிடும் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள தந்தை பெரியார் சிலை அருகே நேற்று முன்தினம் நிறைவு செய்தார்.***

***கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:***

வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 20 நாட்கள் சுற்றுப்பயணம்

சென்ற முறை தலைவர் அவர்கள் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். கடந்த முறையும் தமிழ்நாடு முழுவதும் சுற்றிக்கொண்டு இருந்ததனால், தொகுதிக்கு வந்து என்னால் வாக்குக் கேட்க முடியவில்லை. அப்பொழுதும் மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள். இந்த முறையும் அதே மாதிரி கடந்த 20 நாட்களாக 135 தொகுதிகளுக்குச் சென்று, நம் தலைவருக்காக, கழகத்துக்காக, கழகத்தின் வெற்றிக்காக நான் உழைத்திருக்கிறேன் என்றால், நான் மட்டும் உழைக்கவில்லை, நீங்களும் சேர்ந்துதான் உழைத்திருக்கிறீர்கள். அந்த உழைப்பில் உங்களுக்கும் பங்கு இருக்கிறது. ஏனெனில், 20 நாட்கள் நான் இங்கே இல்லை. இந்தத் தொகுதி முழுக்கச் சுற்றிச் சுற்றி ஒவ்வொரு தெருவாக, ஒவ்வொரு வீடாகச் சென்று ஏறி இறங்கி வாக்குக் கேட்டது, வந்திருக்கக்கூடிய நிர்வாகிகளாகிய நீங்கள்தாம். அதற்கு முதலில் நான் என்றென்றும் நன்றிக்கடன்பட்டிருப்பேன்.

### உங்களின் ஒத்துழைப்பு

கடந்த முறை கிட்டத்தட்ட 70,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள். வெற்றி பெற்ற உடனே நான் என்றைக்கோ வந்து உங்களைப் பார்க்கிற மாதிரி மற்ற வேட்பாளர்கள் மாதிரியோ மற்ற கழகத்தில் இருக்கிற மாதிரி கிடையாது. உங்களுடனே பயணித்தேன். கடந்த ஐந்து வருடங்களாக அனைத்து சுக-துக்க நிகழ்ச்சிகளிலும் உங்களின் குடும்பத்தில் ஒருவனாக என்னை நீங்கள் வைத்திருந்தீர்கள். இன்னும் சொல்லப்போனால், நான் இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக மட்டும் இல்லை, உங்களின் ஒத்துழைப்பினால் ஓர் அமைச்சராக, இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சரை உருவாக்கியது இந்தச் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி. அதற்கு என்றென்றைக்கும் நான் கடமைப் பட்டிருப்பேன்.

கடந்த ஐந்து வருடம் என்னால் முடிந்த அனைத்துப் பணிகளையும் சிறப்பாக, நான் தனியாகச் செய்தேன் என்று சொல்ல மாட்டேன். நாம் இரண்டு பேரும் சேர்ந்து ஒன்றாக, அத்தனை பணிகளையும் ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு தெருவுக்கும் என்னென்ன தேவை என்பதைப் பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறோம்.

### சேப்பாக்கம்–திருவல்லிக்கேணியின் செல்லப்பிள்ளை

இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் நான் பயணம் செய்கிறேன். இளைஞர் அணிச் செயலாளர் என்று சொல்வார்கள், சின்னவர் என்று சொல்வார்கள், அமைச்சர் என்று சொல்வார்கள், துணை முதலமைச்சர் என்று சொல்வார்கள். ஆனால், எல்லோரும் செல்லமாகக் கூப்பிடுவது, 'சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியின் செல்லப்பிள்ளை' வந்திருக்கிறார் என்றுதான் சொல்வார்கள். அந்த அளவுக்கு இந்தத் தொகுதி இப்போது எனக்கு மனதுக்கு நெருக்கமாக, உங்களிடமிருந்து என்னைப் பிரித்துப் பேச விரும்பவில்லை. நாம் அத்தனை பேரும் இந்தத் தொகுதியில் அப்படிப் பணியாற்றி இருக்கிறோம்.

நான் கண்டிப்பாகச் சொல்கிறேன் 135 தொகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்துவிட்டு வந்திருக்கிறேன். நிச்சயம், நம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கப்போவது உறுதி. மீண்டும் நம் தலைவர் அவர்கள்தாம் முதலமைச்சர் பொறுப்பில் உட்காரப்போகிறார்கள். அதற்கு ஒரு தூண்டுகோலாக, 'கவுண்ட்டவுன் ஸ்டார்ட்' என்று சொல்வார்களே அதற்கு நம் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி அதிகமான வாக்கு வித்தியாசத்தில் மீண்டும் நீங்கள் வெற்றி பெற வைப்பீர்கள் என்ற அந்த நம்பிக்கை இருக்கிறது.

### முன்மாதிரி தொகுதி

குறிப்பாக, ஐந்து வருடம் நம் தலைவர் அவர்களின் திட்டங்கள், சாதனைகள் மக்களிடம் சென்றடைந்துள்ளன. ஒவ்வொரு திட்டமும் சென்ற முறை என்னென்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறோமோ அதை எல்லாம் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார் தலைவர். அதைத் தவிர, முக்கியமான வாக்குறுதிகளும் கொடுத்திருக்கிறோம் இந்த முறை ஆட்சிக்கு வந்தோம் என்றால், என்னென்ன செய்வோம் என்பதும், தமிழ்நாட்டு மக்கள் யார் கொடுக்கிற வாக்குறுதியை நம்புகிறார்களோ இல்லையோ, நம் தலைவர் கொடுக்கிற வாக்குறுதியை நிச்சயம் இவர் சொன்னால் செய்வார் என்கிற நம்பிக்கை, நம் தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிறது. எனவே, அடித்துச் சொல்கிறேன் இந்த முறையும் நம் திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய வெற்றியைப் பெறப் போகிறது.

சங்கிக் கூட்டத்தையும் அடிமைக் கூட்டத்தையும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடமாட்டோம் என்கிற உறுதியை இந்தத் தமிழ்நாட்டு மக்கள் இந்தத் தேர்தலில் நிச்சயம் எடுப்பார்கள்.

எனவே, உங்களுக்கெல்லாம் மீண்டும் என்னுடைய நன்றியைச்சொல்லி, மீண்டும் என்னை நிச்சயம் வெற்றி பெற வைக்கப்போகிறீர்கள், அது உறுதியாக எனக்குத் தெரிகிறது. எத்தனை வாக்கு வித்தியாசம் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

கடந்த முறை வாங்கியதைவிட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு மீண்டும் அடுத்து ஜெயித்தாலும் தோற்றாலும் இந்தச் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்றைக்குமே நான் உங்களோடுதான் நான் பயணிக்கப்போகிறேன். எனவே, இரண்டு பேரும் சேர்ந்து பயணிப்போம். இந்தச் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியை இன்றைக்குத் தமிழ்நாட்டிலேயே ஒரு முன்மாதிரி தொகுதியாக நிச்சயம் சீக்கிரம் மாற்றிக் காட்டுவோம். அதற்கான பணிகளைச் செய்திருக்கிறோம்.

### மீண்டும் திராவிட மாடல் ஆட்சி 2.0

மீண்டும் ஆட்சிக்கு வந்து தலைவரின் உத்தரவைப் பெற்று மீண்டும் அந்தப் பணிகளை எல்லாம் செய்வோம். கடந்த மூன்று நாட்களாக மட்டுமல்ல, கடந்த 25 நாட்களாக நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீடாக ஏறி, இறங்கி இருக்கிறீர்கள், ஒவ்வொரு வாக்காளரைச் சந்தித்திருக்கிறீர்கள். எனவே, உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து நம் திராவிட மாடல் ஆட்சி 2.0 அமையப்போவது உறுதி.

இப்போது நம் வேலை 23-ஆம் தேதி அனைவரும் வாக்களிக்க வேண்டும். அனைவரும் உதயசூரியனுக்கு வாக்களிக்க வேண்டும் என்று சொல்லவில்லை, அனைவரும் முதலில் வாக்களிக்க வேண்டும். அந்த விழிப்புணர்வை நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் குடும்பங்களில், உங்களின் வீடுகளில், உங்களின் தெருக்களில் அந்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துங்கள்.

அனைவரும் கண்டிப்பாக உதயசூரியன் சின்னத்தில் வாக்களிப்பதையும் நீங்கள் அத்தனை பேரும் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சிறப்பான பிரச்சார நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நம் கழக நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் கலைஞரின் உடன்பிறப்புகள் உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### நன்றி தெரிவித்தார்

**முன்னதாக, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றும் போது,**

நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு, பகுதிக் கழகச் செயலாளர்கள் காமராஜ், மதன் மோகன், தொகுதி பார்வையாளர்கள் சி.ஹெச்.சேகர், பாபு, வழக்கறிஞர் சரவணன், அர்ஜுன் சங்கர், வழக்கறிஞர் விவேக், மணிகண்டன், சந்திரநாதன், சிவ சூர்ய முருகன், ஜெயப்பிரகாஷ், சமூக வலைதளத்தில் பிரச்சாரங்களை ஒருங்கிணைத்த அருமை சகோதரி நிவேதிதா ஜெசிகா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தினேஷ், பாலச்சந்தர், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சாஜத், கிரிதரன், அனைத்து இளைஞர் அணி நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள் வி.என்.துரை, வி.என்.ராஜன், கமலா செழியன், ராஜ்குமார், மாநில நிர்வாகிகள் வி.பி. பொன்னரசு, வி.பி.மணி, அலுவலகப் பணிக்காக இங்கிருந்து பணியாற்றிய நம் தொடர்புக் குழுவின் மாநிலத் துணைச் செயலாளர் மருத்துவர் ஹஃபிசுல்லா, வட்டக் கழகச் செயலாளர்கள் ஜெகதீசன், மகேஷ், பிரபாகரன், சின்னராசு, கோபி, தமீம், ஜி.வி., செந்தில்குமார், சசி, விஜய குமார், மோகன், லைனர் பிரபு, ஐ.சி.எஃப். சங்கர், கேரளா ரவி, மாமன்ற உறுப்பினர்கள் சிவராஜ சேகரன், ஈஸ்வரி வெங்கடேசன், மங்கை ராஜ்குமார், ரஹ்மத்துல்லா, துபாய் விஜய், ராஜராஜன், அனைத்துக் கழக அணிகளின் நிர்வாகிகள், அசோகன், சட்டமன்ற அலுவலகப் பணியாளர்கள் அஸ்வின், மஞ்சுநாத், சதீஷ், யோகேஷ், சுதாகர், தருண், நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த அனைத்து நண்பர்களுக்கும், தயாநிதி மாறன் அவர்களின் உதவியாளர் ஆனந்த், மாவட்டச் செயலாளர் சிற்றரசுவின் உதவியாளர் பிரவீன், பிரச்சார வாகன ஓட்டுநர்கள் கண்ணன், மகேஷ் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும், அனைத்துச் சங்கங்களின் நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.



சின்னாளபட்டிக்கு ரூ. 750 கோடி மதிப்பில் வைகை அணையிலிருந்து குடி தண்ணீர் கொண்டுவரப்படும் என்றும், அரசு சமுதாய நல மையம் 24 மணி நேரமும் செயல்படும் அரசு மருத்துவமனையாக மாற்றப்படும் என சின்னாளபட்டியில் நடைபெற்ற இறுதிகட்ட தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பொதுமக்கள் மத்தியில் பேசி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். மாணவன் ஒருவர் அமைச்சரின் படத்தை வரைந்து அமைச்சரிடம் வழங்கி பாராட்டைபெற்றார். அருகில் ஒன்றிய செயலாளர் முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.